Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 08 ( 24 - 10 - 1992 ) சனிக்கிழமை ஓசை 249

## நான்கு கட்ட நிவாரணம் இம் மாதம் கிடைக்கும்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த அகதிகளுக்கான இம்மாதத்திற்குரிய உலர் உணவு நிவாரணம் முழுமையாக வழங்கப்பட உள்ளது. இதன் அடிப்படையில் இம்மாதம் நான்கு கட்ட உலர் உணவு விநியோகிக்கப்பட உள்ளது. உலர் உணவை அரைவாசியாக குறைப்பதற்கான உத்தரவு கடந்த மாதத்திற்கு மட்டுமே என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இம் மாதம் 15 ஆம் திகதி தொடக்கமே நிவாரணத்தை முழுமையாக வழங்குவதற்கு முன்னர் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. நேற்று நண்பகல் யாழ். செயலகத்தில் இருந்து பெற்றுக் கொண்ட தகவலின்படி இம்மாதம் முதலாம் [4 ஆம் பக்கம் பார்க்க]

# வடமராட்சியில் குண்டுவீச்சு

# 2 பெண்கள் பலி; பலர் காயம்

## குடியிருப்புகள் மீது அனர்த்தம்

[வடமராட்சி]

வடமராட்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக்காலை நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சில் இரண்டு பெண்கள் கொல்லப்பட்டனர், நான்கு பேர் காயமடைந்தனர். இரு தடவைகளில், மூன்று இடங்களில் நடாத்தப்பட்ட இக்குண்டு வீச்சின் போது மொத்தம் எட்டுக் குண்டுகள் வீசப்பட்டன. இக்குண்டு வீச்சில் பல வீடுகளும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் மணல்காடு குடத்தனைப் பகுதிக்கு திடீரென வந்த நான்கு பொம்மர்கள் பல தடைவைகள் வட்டமிட்ட பின் முதலில் இரு குண்டுகளை வீசியது. அடுத்து மீண்டும் இரண்டு குண்டுகளை வீசியதில் ஒரு வயோதிப மாது ஸ்தலத்தில்பலியானார்மற்றும் நால்வர் படுகாயத்துடன் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட பின்னர் ஒரு பெண் மரணமானார். மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன மரங்களும் முறிந்து காணப்பட்டன.

வீட்டில் இருந்த குடத்தனையைச் சேர்ந்த திருமதி தில்லையம்பலம்-தெய்வானை (வயது 75) ஸ்தலத்தில் பலியானவர் ஆவார். திருமதி முத்துலிங்கம் - சிவபூரணம் (வயது 37) மூளை சிதறிய நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட பின்னர் மரணமானார்.

இவரதுமகள் முத்துலிங்கம்-சுநா [வயது 14], பாடசாலையை விட்டு வீட்டுக்கு சென்றுகொண்டிருந்த செல்வி ெப பஸ்களா (வயது 13) ஆகியோர் காயமடைந்தனர். பின்னர் இரண்டு பொம்மர்கள் பருத்தித்துறை ஆனை விழுந்தான் பகுதியை மூன்று தடவைகள் வட்டமிட்டு விட்டு பலாலி நோக்கிச் சென்றன.

இக் குண்டு வீச்சு சம்பவம் இடம் பெற்றபோது அருகிலுள்ள குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் சிதறி ஓடி தமது பாதுகாப்பை தேடிக்கொண்டனர்.

நண்பகல் 11 00 மணியளவில் ஆனைவிழுந்தான் பகுதியை ஒரு உலங்குவானூர்தி நோட்டமிட்டுக்கொண்டிருந்த வேளை பலாலியில் இருந்து கடலோரப் பகுதியாக நான்கு பொம்மர்கள் வான்பரப்பில் ஒரே அணியாக வந்தது. பொம்மர்கள் ஆனை விழுந்தானில் இரண்டு குண்டுகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பு சிறையில் 11 தமிழர் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 11 தமிழர்களது பெயர்ப்பட்டியல் வெளியாகியிருக்கிறது

யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சிறைச்சாலைகள் திணைக்கள அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இப்பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

பட்டியல் மிகவிரைவில் வெளியிடப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது (க)

## யாழ். குடாவிற்கு
# தனியான கப்பலில் மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கென தனியான கப்பல் ஒன்றில் மண்ணெண்ணெய் எடுத்து ...

இணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஒரு தொகுதி மண்ணெண்ணெயை அனுப்பி ...

# பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகவேண்டுமாம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமரும் பாதுகாப்பு இராஜங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்க தனதுபாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என ஐலண்ட் நாளிதழ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விஜயதுங்க தனது வயது வேலைப்பளு காரணமாக இப்பதவியிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் திறமையுள்ள வேறொருவ

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இளாலி கடற்பரப்பில் இரண்டு வள்ளங்கள் மீது சூடு

### ஒருவர் காயம்; இருவரைக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

புலோப்பளைக் கடற்பரப்பில் வள்ளங்கள் மீது கடற்படையினர் நடத்திய சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் படுகாயமடைந்தார். ஓட்டிகள் நிலைமை தெரியவில்லை இரண்டு வள்ளங்கள் கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டன.

நேற்று மாலை 5-30 மணியளவில் இளாலி கடற் பகுதியிலிருந்து ஆலங்கேணிப்பகுதி நோக்கி பொருள்களை ஏற்றச் சென்ற வள்ளங்களின் மீதே கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஒரு படகை

( 04 ஆம் பக்கம் பார்க்க)

## அலுவலக விடயமாக கப்பலில் செல்ல
# யாழ். அரச அதிகாரிகளுக்கு அனுமதி தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் அலுவலகவிடையமாக கப்பலில்செல்வதற்கு கூட்டுப்படைகளின் அனுமதி பெறவேண்டிய தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து நேற்று நண்பகல் கிடைத்த தகவலின்படி இதுவரைகாலமும் நடைமுறையில் இருந்த கூட்டுப்படைகளின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற நடைமுறை ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது

எனினும் கொழும்பு செல்பவர்கள் கப்பலில் அழைத்துச் செல்லப்படுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளது அனுமதி பெறப்பட வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பில் தங்கியிருக்கும் இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி மேற்படி விடயம் தொடர்பாக செய்த புகாரைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது (க)

## எறிகணைத் தாக்குதல்

[மானிப்பாய்]

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 7 மணியளவில் படையினர் சரமாரியாக 50 கலிபர் தாக்குதல்களை குடியிருப்புக்கள்நோக்கி மேற்கொண்டனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இணைப்பு
### உள்ளே

மன்னார் மாவட்ட முன்னாள் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சுபனின்உருவப்படம் இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளைய ஈழநாதத்துடனும் இவரது உருவப்படம் இணைக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

# முஸ்லிம்கள் - பொலிஸ் மோதல் ஆர்ப்பாட்டக்காரர் கலகம்

பின் முதலில் இரு குண்டுக ளை வீசியது. அடுத்து மீண்டும் இரண்டு குண்டுகளை வீசிய தில் ஒரு வயோதிப மாது ஸ்தலத்தில்பலியானார்மற்றும் நால்வர் படுகாயத்துடன் மந் திகை வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட பின்னர் ஒரு பெண் மரணமானார். மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன மரங்களும் முறிந்து காணப்பட்டன.

துலிங்கம் - சிவபூரணம் (வயது 37) மூளை சிதறிய நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட பின்னர் மரண மானார்.

இவரதுமகள் முத்துலிங்கம்-சுதா [வயது 14], பாடசா லையை விட்டு வீட்டுக்கு சென்றுகொண்டிருந்த செல்வி ஜெபஸ்களா (வயது 13) ஆகியோர் காயமடைந்தனர். பின்னர் இரண்டு பொம்மர்கள்

இடம் பெற்றபோது அருகி லுள்ள குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் சிதறி ஓடி தமது பாதுகாப்பை தேடிக்கொண்ட னர்.

கடலோரப் பகுதியாக நான்கு பொம்மர்கள் வான்பரப்பில் ஒரே அணியாக வந்தது. பொம்மர்கள் ஆனை விழுந் தானில் இரண்டு குண்டுகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து நேற்று நண்பகல் கிடைத்த தகவலின் படி இதுவரைகாலமும் நடை முறையில் இருந்த கூட்டுப் படைகளின் அனுமதி பெறப் பட வேண்டும் என்ற நடை முறை ரத்துச்செய்யப்பட்டிருக் கிறது

எனினும் கொழும்பு செல் பவர்கள் கப்பலில் அழைத்துச் செல்லப்படுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி களது அனுமதி பெறப்பட

முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது (க)

## யாழ். குடாவிற்கு
# தனியான கப்பலில் மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கென தனியான கப்பல் ஒன்றில் மண்ணெண்ணெய் எடுத்து வரப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங் களிற்கே இவ்வாறு தனியான கப்பல் ஒன்றில் மண்ணெண் ணெய் எடுத்து வரப்படவுள் ளது. கடந்த மாதம் கொழும் பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற புனர்வாழ்வு இணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஒரு தொகுதி மண்ணெண்ணெயை அனுப்பி வைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டது இதற்கான ஒழுங்கு களைக் கவனிக்கும்படியான பணிப்புரை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரி னால் அவரது உதவியாளர் திரு ரபீக் என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இத னைத் தொடர்ந்து இத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நீர்கொழும்பு சிறையில் 11 தமிழர் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்புச் சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்பட் டிருக்கும் யாழ். மாவட்டத் தைச் சேர்ந்த சுமார் 11 தமி ழர்களது பெயர்ப்பட்டியல் வெளியாகியிருக்கிறது

யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சிறைச்சாலை கள் திணைக்கள அதிகாரிகளு டன் நடத்திய பேச்சுவார்த் தையைத் தொடர்ந்து இப்பட் டியல் வெளியிடப்பட்டிருக்கி றது,

கே. கணபதிப்பிள்ளை வி. சிவசுப்பிரமணியம், எஸ். ரூபகுமார், ரி. மோகன்ராஜ், ஜே. இங்கிஸ்லி நேசராஜ், பி. சயீவன், கே ரவீந்திரா, எ. றோபேட், எ. இராஜேந்திரன், எஸ், இராஜதுரை, ரி சுப்பிர மணியம் ஆகியோரது பெயர் விபரங்களே வெளியிடப்பட்டி ருக்கிறது. அத்துடன் புத்தளம் சிறைச்சாலையில் யாழ். மாவட் டத்தைச் சேர்ந்தவர்கள் எவ ரும் இல்லை என்று தெரிவிக் கப்பட்டிருக்கிறது

அனுராதபுரம், மட்டக் களப்பு சிறைச்சாலைகளில் உள்ள தமிழர்களது பெயர்ப் பட்டியல் மிகவிரைவில் வெளி யிடப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது (க)

# எறிகணைத் தாக்குதல்

[மானிப்பாய்]

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 7 மணி யளவில் படையினர் சரமாரி யாக 50 கலிபர் தாக்குதல் களை குடியிருப்புக்களைநோக்கி மேற்கொண்டனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இணைப்பு உள்ளே

மன்னார் மாவட்ட முன் னாள் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சுபனின் உருவப்படம் இன் றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளைய ஈழநாதத்துடனும் இவ ரது உருவப்படம் இணைக் கப்படும் என்பதனை அறி யத் தருகின்றோம்.

# முஸ்லிம்கள் - பொலிஸ் மோதல் ஆர்ப்பாட்டக்காரர் கலகம்
## கொழும்பில் கண்ணீர்ப்புகை பிரயோகம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஒரு பள்ளி வாசலில் நேற்று வெள்ளிக் கிழமை கொத்துபா தொழு கை நடந்து கொண்டிருந்த சம யம் வன்செயல்கள் இடம் பெற்றன.

மருதானை சஹிராக் கல்லூ ரிக்கு அருகாமையில் உள்ள மசூதியில் நேற்றுக் கறுப்பு வெள்ளி அனுஷ்டிக்கப்பட்டுக் கொத்துபா தொழுகை நடந்து கொண்டிருந்த போதே இக்கல கம் ஆரம்பித்தது.

மசூதியைச் சுற்றிப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப் பட்டிருந்தது மசூதியைச் சுற்றி யிருந்த கட்டடங்களிலிருந்து அரசுக்கு ஆதரவான கும்பல் ஒன்று சுலோக அட்டைகளைத் தாங்கிக் கொண்டு மசூதிவளா கத்துக்குள் போக முயற்சித்தது இவ்வேளை தொழுகையில் ஈடு பட்டிருந்த முஸ்லிம்கள் கூச்ச லிட்டுக் கும்பலை நோக்கிக் கற் களை வீசினர். கும்பல் பின் வாங்கியது இதைத் தொடர் ந்து முஸ்லிம்களின் ஆத்திரம் பொலிசார் மீது திரும்பியது பொலிசார் முஸ்லிம் ஆர்ப் பாட்டக்காரர் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர் முஸ்லிம்கள் கலைந்து ஓடினர் தப்பியோடிய முஸ்லிம்களை பொலிசார் சந்து பொந்துக ளில் தேடி அடித்தார்கள்

சம்பவம் நடந்த இடத்தில் கடைகளை எவரும் நெருங்க முடியாதவாறு கடை உரிமை யாளர் தடைகளை எழுப்பி யிருந்தனர் இதனால் சில மணி நேரம் வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டது

இந்த கலவரத்தின் போது பொலிசாரும் ஆர்ப்பாட்டக் காரர்களும் காயமடைந்தனர் காயமுற்றோர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட னர்.

பஸ்வண்டிகளுக்கும் தீ வைக் கப் பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன எதிர்க்கட்சிகள் பாராளுமன் றத்தைப் பகிஷ்கரித்ததால் பாராளுமன்றக் கூட்டம் பின் போடப்பட்டது.

## முஸ்லிம் மதகுருமார் கண்டனம்

(கொழும்பு)

மருதானையில் நேற்று நடை பெற்ற கண்ணீர்ப்புகைச் சம் பவங்களுக்கு முஸ்லிம் மதகுரு மார் கண்டனம்செய்துள்ளனர் பள்ளிவாசலை யுத்தபூமியாக மாற்ற அரசின் திட்டமிட்ட செயல் இதுவாகும் என அவர் கள் கண்டனம் தெரிவித்தனர்

# நாகர் கோவில் பிரதேச காவல்பணிமனை திறப்பு

தமிழீழ காவல் துறையின் நாகர் கோயில் பிரதேசத்திற் கான காவல் பணிமனை நேற்றுக்காலை ஏழு மணிக்கு கடற்புலிகளின் தளபதி கங்கை அமரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்ச் சியின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியை தளபதி கங்கை அமரனும், காவல் துறைக் கொடியை காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனும் ஏற்றி வைத் தனர்.

இதைத் தொடர்ந்து தென் மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி கலை, கடற்புலிகள் மூத்த உறுப்பி னர் முத்தண்ணா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க தளபதி கங்கை அமரன் காவல் பணிமனையைத் திறந்துவைத் தார். இந்நிகழ்ச்சியில் கடற்புலி மகளிர் படைத்தளபதி செல்வி நளாயினி. கடற்புலி யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. மறவன் உட்பட இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

இப்பணிமனையில் தாளை யடி, உடுத்துறை, செம்பியன் பற்று, குடாறப்பு, மாமுனை, அம்பன் குடத்தனை, மணல்

(4ஆம் பக்கம் பார்க்க)


## சிரித்திரன் இன்று வெளிவரும்

சிரித்திரன் புரட்டாதி-ஐப் பசி இதழ் இன்று வெளிவரு கிறது.

இவ்விதழில் மகுடி பதில் கள், அன்னபூரணி கப்பலின் அமெரிக்கப் பயணம் பற்றி கலாபரணி எழுதிய "அமெரி க்க மருமகளான அன்னபூரணி அம்பாள்", வல்வை ந அன ந்தராஜ் எழுதிய "சூழ் நியா யம்" நகைச்சுவைத் தொடர் என்பனவற்றுடன் "பொய் சொல்ல கூடாது பாப்பா" என்ற தலைப்பில் சந்தோசத் துடனான தமது அனுபவங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை
### செந்தூரன்

21-10-92 அன்று வசாவி ளான் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரச் சாவு அடைந்த வீரவேங்கை செந்தூரன் (செல்வன் - சிவ ராசா ஜெகதாசன், அருள் வீதி, மானிப்பாய்) எனும் போராளிக்கு விடுதலைப் புலி கள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## அம்பாறை மாவட்டத்தில்
# காணிதொடர்பான செயற்பாடு பிரதேச செயலகத்திடம்

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்ட காணி சம்பந்தமான சகல நடவடிக் கைகளும் இப்போது மாவட் டத்தில் உள்ள பதினைந்து பிரதேச செயலகங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன இதற்கான அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காணிக் கச்சேரிகள், சட்ட விரோதமான குடியேற்றங் களைத் தடுத்தல், புதிய குடி யேற்றங்கள், காணித்தகராறு கள், காணிஉத்தரவுப்பத்திரங் கள் மாற்றம் செய்யப்படுவது, சுவர்ண பூமித் திட்டத்தின்கீழ் நிரந்தர உறுதிகள் வழங்குவது போன்ற வேலைகள் எல்லாம் பிரதேச செயலகத்தில் நடை பெறும். இதற்கு ஏற்றவாறு ஊழியர்களும், தளபாடங் களும் பிரதேச செயலகங்களு க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாகவும் கூறப்படுகிறது.

# இளவாலையில் 36 மாணவர் படையினரிடம் சிக்கியுள்ளனர்
## விடுவிக்கப்பட்ட ஆசிரியை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் இராணுவத்தின ரின் பிடியில் சிக்கியிருக்கும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறவே விரும்புகின்ற னர். ஆனால் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு சிறிலங்காப் படையினர் அனு மதி வழங்க மறுத்து வருகின் றனர்.

மேற்படி பகுதிகளுக்குரிய சிவில் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் இரத்தி னாயக்கா என்டவருக்கு அங் குள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்கும்படி கோரி விண்ணப் பித்துள்ளனர். எனினும் ஒரு சிலருக்கு மட்டுமே இதுவரை வெளியேறுவதற்கான அனு மதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இப்பகுதிகளில் இரு ந்து படையினரால் நேற்று விடுவிக்கப்பட்ட ஆசிரியை தெரிவித்தார்.

( 04 ஆம் பக்கம் பார்க்க)

# இளவாலை ராணுவத்தால் ஆசிரியை விடுவிப்பு

(வடமராட்சி)

இளவாலைப் பகுதியில் கடந்த மாதம் 21 ஆம் திகதி இராணுவத்தால் கைது செய் யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டிருந்த இளம் பெண் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்த டைந்தார்.

யாழ்ப்பாணம் சம்பத்திரிசி யார் கல்லூரி ஆசிரியையான செல்வி என். யோசப் (வயது 25) என்பவரே செஞ்சிலுவை சங்கத்தினரின் உதவியுடன் உறவினரிடம் ஒப்படைக்கப் பட்டார். ]82]

**வனம் ஒரு நாட்டின் தனம்**

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு

HY - LINE P‘IMA BHIRA கைலைன்வெள்ளை, கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை' மானிப்பாய். (3503)

### வாசிப்போர் தேவை

பார்வையற்றோருக்கு சேவை அடிப்படையில் தமிழ் புத்தகங்கள் வாசிக்கக் கூடிய வர்கள் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். முக வரி: A. பரமேஸ்வரன், C/o. A. S. ஆறுமுகம், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (3213)

### திருப்புகழ் பண்ணிசைக் குழு

திருவிழாக் காலங்களில் ஆல யங்களில் பக்திரசம் ததும்பும் திருப்புகழ் இசையைக் கேட்ப தற்கு நாடவும். செல்வம்ஸ் திருப்புகழ் பண்ணிசைக் குழு. விபரங்களுக்கு சைன் பறறி சேவிஸ், ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய் (3511)

### மெய்கண்டார்வழிபாடு

யாழ். கலைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் திங்கள் பிற்பகல் 3-00 மணிக்குக் காஞ்சி மெய்கண்டார் ஆதீனக் குரு நினைவகச் சார்பில் நிக ழும். (3507)

### தேவை

சாராய வெற்றுப்போத்தல், (750 மில்லி) பெட்டி தேவை. வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் விலை பேசித் தீர்க்கப்படும். பொது முகாமையாளர், வடமராட்சிக் கொத்தணி, திக்கம் வடிசாலை, திக்கம், (3402)

### தவறிவிட்டது

ம. ச. தேவரத்தினம் (பலாலி தெற்கு, வசாவிளான்) என்பவருடைய அடையாள அட்டை (இல. 571193023V) கிளிநொச்சியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். ஸ்பொட். கிளிநெச்சி அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்க வும். (3516)

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின் சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப் பாணம். (சி-5250)

### மலிவு விற்பனை

தீபாவளித் திருநாளை முன் னிட்டு றெடிமேற் ஸ்கேட்' பிளவுஸ், சிங்கப்பூர் கவுண்கள், சூட்டிங் சேட்டிங் வகைகள் இன்று தொடக்கம் 25-10-92 வரை மலிவு விலையில் கிடைக்கும், தவறவிடாதீர்கள். துர்க்கா ரெக்ஸ் 164, நவீன சந்தை உட்புறம் யாழ்ப் பாணம். (சி-5251)

### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத் தமும் அவற்றை வெற்றிகர மாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி—ரூபா 12-00. தேவை யானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் முகவரி ஜோ. எக்கட்டன் 19/3 கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி மக ளிர் கல்லூரிஎதிர் ஒழுங்கை,— சுண்டிக்குளி சபாரிசிலும் பெற் றுக் கொள்ளலாம். (சி-5231)

### மெய்கண்டார் தினம்

யாழ் இந்து ஆரம்ப பாட சாலையில் இன்று சனி, ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு மெய்கண்டதேவர் சிவ ஞான சைவசித்தாந்த உயர் நிறுவனச் சார்பில் கொண் டாடப்படும். மூதறிஞர் க. சி. குலரத்தினம், சித் தாந்தமணி மு திருஞான சம்பந்தபிள்ளை சொற்பொழி வாற்றுவர். (3506)

### புலமைப்பரிசில் மீட்டற் பயிற்சி

வெளிவந்துவிட்டது! விற் பனையாகிறது! புலமைப் பரி சில் ஆண்டு 6 அனுமதிப் பரீட் சையில் திறமையாகச் சித்தி பெற புதிய கல்வி நிலையத் தால் புதிதாக வெளியிடப் பட்ட துரித மீட்டற் பயிற் சியை (15 பயிற்சிகள்-விடைக ளுடன்) புதிய கல்வி நிலையத் திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (3518)

### பரீட்சை (ஆண்டு 4)

ஆண்டு 4 புலமைப்பரிசில் (1993) மாதிரிப் பரீட்சை 24-10-92 சனி மு.ப. 8.00, மு.ப 11.00 (தமிழ் கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். மேற்படி பரீட்சைக்கான மா திரி வகுப்புக்கள் ஆரம்பமாகி யுள்ளன புதியமாணவர் சேர்த் துக் கொள்ளப்படுவர் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3517)

### சீனி விநியோகம்

புலோலி பலநோக்குக் கூட் டுறவுச் சங்கம் பாவனையா ளர்களுக்குச் சீனியைப் பங் கீட்டு அடிப்படையில் கிலோ 28 ரூபா வீதம் விநியோகி த்து வருகின்றது. தற் பொழுது இரண்டாம் கட்ட சீனி விநியோகம் நடைபெற்று வருகின்றது. 28 ஆம் திகதி யிலிருந்து மூன்றாங் கட்ட சீனி விநியோகத்தை மேற் கொள்ள ப. நோ. கூ. சங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. (25)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-10-24

1985-ம் ஆண்டு இதேதினத்தில் திரியாய்ப் பகுதி யிலிருந்த எமது முகாமொன்றை சுற்றி வளைத்த சிறி லங்காப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சா வெய்திய-

**முகமட்** (கணபதிப்பிள்ளை சௌந்தரராசன் அன்பு வழிபுரம் திருக்கோணமலை)

1986-ம் ஆண்டு வீரச்சாவெய்திய-

**லிங்கன்** (கிருஷ்ணபிள்ளை சொர்ணலிங்கம் குமர புரம், பரந்தன் — கிளிநொச்சி)

1987-ம் ஆண்டு மட்டக்களப்பு - வடமுனைப்பகுதி யில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சா வெய்திய-

**கப்டன் ரதீஸ்** (நல்லதம்பி முத்தழகு-வாழைச்சேனை மட்டக்களப்பு)

யாழ்-கல்லுண்டாய் வெளியில், இந்தியப்படையின ருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கரன்** (இரத்தினம் பபிசுதன் - 5/1, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை - யாழ்)

கல்வியங்காட்டுப்பகுதியில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

**அ. செல்லச்சாமி**

பொன்னாலைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற் கொண்ட உலங்கு வானூர்தித்தாக்குதலில் கொல்லப் பட்ட 5-தமிழர்கள்

1988-ம் ஆண்டு நித்திகைக்குளம் பகுதியில் இந்தி யப்படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் வீரச்சா வெய்திய-

**கப்டன் சதீஸ்** (மூத்ததம்பி தெய்வேந்திரம் - நாவற் காடு, வரணி)

1989-ம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோதசக்தி களால் சுட்டுக்கொல்லப்பட்ட நீதிமன்ற ஊழியரான தமிழ்ப்பொதுமகன்

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங் காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் கென்றி** (ஏகாம்பரம் பன்னீர்ச்செல்வன் 50, நெடுங்குளம் வீதி, பாசையூர்-யாழ்.)

சாவகச்சேரி பொதுச்சந்தை மீது சிறிலங்காப்படை யினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப் பட்ட நாவாந்துறையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்

மட்டக்களப்பில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல் லப்பட்ட மட்டு - புகையிரத நிலைய - விடுதி வாசியான தமிழர்

1991-ம் ஆண்டு வந்தாறு மூலைப்பகுதியில் சிறிலங் காப்படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**அன்ரனி** [அன்ரனிதாஸ் சிவத்தப்பாலம் வெளி மட்டக் களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-5282]

## "மாற்றம்"

காலாண்டு மக்கள் சஞ்சிகை

### வெளியீட்டு விழா

தலைவர்: கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை
இடம்: கயபன் கோட்டர், நல்லூர்
காலம்: 24.10.1992 [இன்று] மாலை 3.00 மணிக்கு

வெளியீடு:
தமிழ்த்தாய்மன்றம்

(3509)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

1993ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். முழுவிபரங்களை யும் 23 10. 1992இல் வெளிவந்த அரச வர்த்தமானி யில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி பொ இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.

சு. சே. பி. ப. பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
21 10. 1992.
(சி-5276)

## எத்திக்கும் வாழும் எம்மினத்தின் புகழ் பரப்பும்
## தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் விலை பேசித் தீர்க்கப்படும். பொது முகாமையாளர், வடமராட்சிக் கொத்தணி, திக்கம் வடிசாலை, திக்கம், (3402)

எக்கட்டன் 19/3 கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரிஎதிர் ஒழுங்கை,— சுண்டிக்குளி சபாரிசிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-5231)

யிலிருந்து மூன்றாங் கட்ட சீனி விநியோகத்தை மேற்கொள்ள ப. நோ. கூ. சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (25)

லப்பட்ட மட்டு - புகையிரத நிலைய - விடுதி வாசியான தமிழர்
1991-ம் ஆண்டு வந்தாறு மூலைப்பகுதியில் சிறிலங்

[சி-5282]


## எத்திக்கும் வாழும் எம்மினத்தின் புகழ் பரப்பும்
## தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உங்கள் இல்லத்தின்
அரைக்கும் வேலைகள்
எதுவானாலும்
அக மகிழ்வுடன்
செய்து தரப்படும்



முதல் தரமான
அரிசி, மா
ஆகியவற்றை
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளவும்...

# முருகன் அரிசி ஆலை

பிரதான வீதி - சாவகச்சேரி

(சி-5283)

### சிந்தனைக்கு

தவறு செய்வதில் தொடர்ந்து முனைவது தவறுக்குச் சமாதானம் ஆகாது: தவறின் சுமையை மேலும் கனமாக்கும்.

வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-10-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## 'கிரிமினல்களுக்கு' ஊக்குவிப்பு

சிறிலங்காவில் உள்ள சிறைச்சாலைகளில் பெருந்தொகையானோர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 15,000 பேர்களைப் பராமரிப்பதற்கென நாளாந்தம் சுமார் 5 25 000 ரூபா செலவு செய்யப்படுவதாக சிறிலங்கா அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தொடர்ந்தும் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும், பெரும் எண்ணிக்கையில் கிரிமினல் குற்றம் புரிந்தவர்கள் தேடப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா பொலிஸ்வட்டாரசெய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அவ்வாறு தேடப்பட்டு வருபவர்களில் அநேகர் கொலை, கற்பழிப்பு, பெரும் கொள்ளை என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களாகவும், நவீன ஆயுதங்களை வைத்திருப்பவர்களாகவும் அவற்றைப்பயன்படுத்தக்கூடியவல்லமை- அதாவது பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பதாக இச் செய்திக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதனை வலியுறுத்துமாப்போலவே தென்னிலங்கைச் சம்பவங்களும் உள்ளன. அண்மையில் கொழும்பு, கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி பிளாசாவில் உள்ளகடையொன்றில்ஆயுதமுனையில்நடைபெற்ற 10 லட்சம் ரூபா கொள்ளை தொடர்பாக ரிசேவ்சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தேடப்பட்டுவருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அநுராதபுரம் இராணுவ பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் சாரதி ஒருவரின் வீட்டைச் சோதனையிட்ட பொலிசாரும், இராணுவப் பொலிசாரும் ரி-56 தானியங்கித் துப்பாக்கி ஒன்றையும், ஒரு சுழல் துப்பாக்கியையும் 105 சுற்று சுடக்கூடிய தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

இதேபோன்றே வத்தளையில் ஓர் இராணுவப் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் ஒருவரின் வீட்டில் இருந்து துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய தோட்டாக்களும் ஓர் இராணுவ பொலிசாரின்மோட்டோர் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன,

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் தென்னிலங்கையில் இயங்கும் 200க்கு மேற்பட்ட

# எழுதுவினைஞர் நியமனம்; நிரந்தரமாவதில் தடங்கல்

(யாழ்ப்பாணம்)

மாகாண எழுதுவினைஞர் சேவைத்திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட தற்காலிக எழுதுவினைஞர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பதில் நிச்சயமற்ற நிலை உருவாகியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்படி மாகாண எழுதுவினைஞர் சேவைக்கென போட்டிப் பரீட்சை ஒன்றின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்பொழுது தற்காலிகமாக நியமனம்வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல அரச திணைக்களங்கள் மற்றும் அரச செயலகம் ஆகியவற்றில் இவர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவர்கள் போட்டிப் பரீட்சைமூலம் தேர்ந்து எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ். செயலக உயர்அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடாத்தினர்

தொடர்ந்து வடகிழக்கு மாகாணசபையின்பிரதமசெயலாளரின் பணிப்பின் பேரில் மாகாண சபை ஆலோசகர் திரு.மார்க்கண்டு தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று நியமனம் வழங்கப்பட்டவர்களது தகைமைச் சான்றிதழ்களை மீள்பரிசீலனை செய்து வருகிறார். மீள்பரிசீலனைமுடிவுற்றதும் மீள்பரிசீலனை தொடர்பான அறிக்கைபொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படும் இதன்பின்னர் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து அமைச்சரவையே ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்று யாழ் அரசாங்க அதிபர் திரு. காமாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மேற்படி சேவைத்திட்டத்தின்கீழ் மாவட்ட மட்டத்தில் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்பதே எமது வாதம். இந்நியமனங்களை நிரந்தரமாக்கும்படி நாம் பொதுநிர்வாக மாகாண சபைகள் அமைச்சை கோருவோம் என்று யாழ்ப்பாணம் வந்திருக்கும் மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசகர் திரு. மார்க்கண்டு தெரிவித்தார்.

அதேவேளை தேசியமட்டத்திலான எழுதுவினைஞர் சேவைத்திட்டத்தின் கீழ் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை மிக விரைவில் நாடு முழுவதும் நடைபெறவுள்ளது இப்போட்டிப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அனைவரும் நிரந்தரமாக நியமிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படுவார்களா என்பதில் நிச்சயமற்றநிலை உருவாகியுள்ளது.

### குடும்பஸ்தர் தற்கொலை

நாகலிங்கம் தியாகராஜா என்ற குடும்பஸ்தர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

ஓமந்தை மகிழங்குளம் பகுதியைச் சேர்ந்த நாற்பதுவயது குடும்பஸ்தரான இவர் கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது(தி

## முற்பண உறுதிச்சீட்டுகள் சமர்ப்பிக்குமாறு பணிப்பு

(நல்லூர்)

முகாமைத்துவம், சேவைக்காலப் பயிற்சிகட்கு வழங்கப்பட்ட முற் பணம், பயணச் செலவு, மற்றும் விஞ்ஞானம், வரைதல், உடற்பயிற்சிக்கல்வி முதலியவற்றுக்காக பொருள்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றுக்காக யாழ். கல்வித்திணைக்களத்தில் இருந்து முற்பணங்களைப் பெற்ற அதிபர்கள் உத்தியோகத்தர்கள் தமது முற்பணத்தை தீர்க்குமுகமாக உறுதிச் சீட்டுக்களை 16-11-1992 - ந் திகதிக்கு முன்னர் யாழ். கல்வித்திணைக்கள நிதிக்கிளைக்கு சமர்ப்பிக்குமாறுயாழ். கல்வித்திணைக்கள கணக்காளர் திரு. இ. சுகுணதீரன் சகல அதிபர்களுக்கும் கோட்டக்கல்விக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதனைக் கடைப்பிடிக்கத் தவறுவோரினது முற்பண நிலுவைகள் மார்கழி மாதச்சம்பளத்திலிருந்து கழிக்கப்படுவதுடன் இவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புதிய பொறுப்பாளரின் கீழ் சிறுவர் பாதுகாப்பு நிதியம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். அலுவலகத்துக்கு பொறுப்பாக புதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. ஜேன் குட்கான் என்ற அதிகாரியே இவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கிறார் லண்டனில் இருந்து கடந்த புதன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர் மேற்படி அலுவலகத்தின் பொறுப்பேற்கும் பணிகளில் ஈடுபட்டுவருகிறார். (கே

### லெப். கேணல் சுபன்; அஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

25.9.92 அன்று பூநகரி சிறிலங்கா இராணுவ மினி முகாம் இராணுவ அரண்கள் மீதான தகர்ப்புத் தாக்குதலில் வீரச்சாவடைந்தமன்னார்மாவட்ட சிறப்புத்தளபதி லெப்.கேணல் சுபன், லெப். தமிழேஸ்வரன், லெப். அறிவுடையான் 2ஆம் லெப். பன்னீர்ச்செல்வன் 2ஆம் லெப். சுருளி, வீரவேங்கை வெடியரசன், வீரவேங்கை இயல்வாணன் ஆகியோரின் வீர வணக்கக் கூட்டம் வரும் திங்கட்கிழமை 26 ஆம் திகதி மாலை 5. 30 மணிக்கு யாழ். புனிதபத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக மன்னார் தொடர்பகம் அறிவித்துள்ளது.

# 'டாக்கா' சார்க் மாநாட்டை இந்தியா நடத்தை பாதிக்கும்

## பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர்

(டாக்கா)

வங்காள மொழி பேசுபவர்களான ஆயிரக்கணக்கானோரை பங்களாதேஷிற்குள் அனுப்புவதற்கு இந்தியா மேற்கொள்ளும் முயற்சி ஒரு ஆத்திர மூட்டும் செயல். இது டாக்காவில் டிசம்பரில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின்(சார்க்) ஏழாவது உச்சி மாநாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்று பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் ஏ.எஸ் எம். முஸ்தாபிசுர் ரஷ்மான் தெரிவிக்கிறார்.

திங்கட்கிழமை இரவு பாராளுமன்றத்தில் உரையாற்றிய ரஷ்மான் பங்களாதேஷிற்குள் அனுப்பப்படுபவர்கள் எல்லோருமே இந்தியப் பிரஜைகள்; பங்களாதேஷிகள் அல்லர் என்றும் குறிப்பிட்டார்.

சுமார் ஆறாயிரம் பேரை பலவந்தமாக பங்களாதேஷிற்குள் அனுப்புவதற்கான முயற்சிகளை இடை நிறுத்துவதற்கு இந்தியா இணங்கிக் கொண்டுள்ளதாக ஞாயிறன்று பங்களாதேஷ் எல்லை இராணுவத் தளபதியொருவர் தெரிவித்தார். ஆனால் இந்தியாவின் நடவடிக்கை தொடருவதாக எல்லைக் காவலர்கள் கூறுகிறார்கள்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் என இந்தியா கூறும் ஆறு லட்சம் பேரை பங்களாதேஷுக்குள் திருப்பி அனுப்புவதற்கான புதுடில்லியின் ஒரு திட்டத்தின் பகுதியே இந்தியாவின் அண்மைய முயற்சிகள் என புலனாய்வு அதிகாரிகள் முன்னதாக தெரிவித்திருந்தனர்.

இந்தியாவின் முயற்சி கண்டிக்கப்படவேண்டியது மனிதாபிமானமற்றது. எதுவிதத்திலும் நியாயப்படுத்த முடியாதது. இச் செயல் சர்வதேச விதிகள் சகலதையும் மீறுவதாகவும் அமைகிறது. 'சார்க்' உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் இச் செயல்கள் இடம்பெறுவது எமக்குகவலையைத் தருகிறது' இந்த வகையான செயல்கள் தொடருமேயானால் உச்சி மாநாட்டுக்கான சாத்தியப்பாடுகளே ஓரளவுக்கு அவை நிச்சயமற்றதாக்கும் என்று

## ஜம்மு - காஷ்மீரில் தேர்தல் தலைவர்கள் ஆலோசனை

(டில்லி)

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடக்குவது பற்றி மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ஜனதாதள் மற்றும் சி.பி.எம். கட்சித் தலைவர்களோடு தனித்தனியே ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தேர்தல் ஒன்றை நடத்தக் கூடிய சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்துவது பற்றியும், அம் மாநிலத்தில் மீண்டும் மக்களாட்சியைக்கொண்டு வருவது பற்றியும் மத்திய அமைச்சர் பல்வேறு கட்சிகளுடனும் ஆலோசனை கலந்து வருவது தெரிந்ததே.

வடமாராட்சி

ஒப்பந்த ஆசிரியருக்கு

## முழுச்சம்பளம் வழங்குக கல்விப்பணிப்பாளர் பணிப்பு

(நல்லூர்)

பொது நிர்வாகச் சுற்றறிக்

கடைசியாக பெற்ற சம்பளத்தின் அரைவாசியே 01- 01- 92

### லியோ கழகம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி லியோ கழகம், இடம் பெயர்ந்த மத்திய கல்லூரியில் கல்விபயிலும் 50 மாணவர்களுக்கு சீருடை வழங்கியது.

இக்கழகம் கடந்த மாதம் பண்டத்தரிப்பிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்களுக்காக அப்பியாசப் புத்தகங்ப் 160களை வழங்கியமை குறிபிடத்தக்கது, (24)

### மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

[மானிப்பாய்]

ஆனையிறவு உப்பள முகாம் மீது வீரகாவியம் படைத்த மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டம் நேற்று மாலை 4. 30 மணியளவில் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்ச்சியை அடுத்து மானிப்பாய் நகரம் சோபை இழந்து காட்சி அளித்தது. மாவீரர்களுக்கு மக்கள் மலர்தூவி தங்கள் அஞ்சலியினைச் செலுத்தினர். மாவீரர்களின் காவியம் கவிவடிவில் ஒலித்த வண்ணம் இருந்தது.

மாலை 5. 15 மணியளவில்

இதனை வலியுறுத்துமாப்போலவே தென்னிலங்கைச் சம்பவங்களும் உள்ளன. அண்மையில் கொழும்பு, கொள்ளுப்பிட்டிய லிபர்ட்டி பிளாசாவில் உள்ளகடையொன்றில்ஆயுதமுனையில்நடைபெற்ற 10 லட்சம் ரூபா கொள்ளை தொடர்பாக ரிசேவ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தேடப்பட்டுவருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அநுராதபுரம் இராணுவ பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் சாரதி ஒருவரின் வீட்டைச் சோதனையிட்ட பொலிசாரும், இராணுவப் பொலிசாரும் ரி-56 தானியங்கித் துப்பாக்கி ஒன்றையும், ஒரு சுழல் துப்பாக்கியையும் 105 சுற்று சுடக்கூடிய தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

இதேபோன்றே வத்தளையில் ஓர் இராணுவப் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் ஒருவரின் வீட்டில் இருந்து துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய தோட்டாக்களும் ஓர் இராணுவ பொலிசாரின்மோட்டோர் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் தென்னிலங்கையில் இயங்கும் 200க்கு மேற்பட்ட கொள்ளைக் கும்பல்களுடன் சேர்ந்தும் தனித்தும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு செயற்பட்டவர்களில் பலர்கைது செய்யப்பட்டும் உள்ளனர். அதாவது சிறிலங்கா ஆயுதப்படையில் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களே இன்று பிரதான சமூகவிரோத சக்திகளாக மாறியுள்ளனர்.

அதாவது சிறிலங்காவில் தற்பொழுது சட்டம் ஒழுங்கிற்குச் சவாலாக இருப்பவர்களும், சிறைச்சாலைகளை நிரப்பி இருப்பவர்களும், சிறிலங்கா அரசாங்கத்தினால் பயிற்சியும், ஆயுதமும் சம்பளமும் வழங்கப்பட்டவர்களே ஆகும். இவர்களே இன்று சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தும் சக்திகளாகவும் உள்ளனர்.

இந்நிலையில் கிழக்கு எல்லையோரக் கிராமங்களின் பாதுகாப்பிற்கென ஐயாயிரம் எல்லைக் காவற்படையை நியமிக்கவும் அவர்களுக்கு ஆயுதமும், பயிற்சியும் வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளமையும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு மேலும் தொல்லைகளை ஏற்படுத்துமே ஒழிய வேறு எதுவித நன்மையும் பயக்கப் போவதில்லை.

அதாவது எல்லைஓரத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள முன்னாள் கிரிமினல்களுக்கும், முஸ்லிம் காடையர்களுக்கும் ஆயுதங்களை வழங்குவது இனப்பிரச்சினையை மேலும் மோசமாக்குவதுடன் சமூக விரோதச்செயல்களை மேலும் அதிகரிக்குமே ஒழிய ஒருபோதும் நன்மை பயக்கும் ஒன்றாக இருக்கப்போவதில்லை.ஏனெனில் தற்பொழுது அரசிடம் ஆயுதம் பெறப்போபவர்கள் ஏற்கனவே 'கிரிமினல்' பட்டியல்களில்உள்ளவர்கள் இவர்களுக்கு கிடைக்கப்போகும் ஆயுதம் இவர்கள்குற்றச் செயல்களுக்கு பாதுகாப்பு வழங்குபவையாகவே அமையப்போகின்றது.

ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியப்படப் போவதில்லை. இராணுவத்தை விரிவாக்கம் செய்வதினால் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை எனப் பலராலும் கூறப்பட்ட ஆலோசனைகளை சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறு கேட்காதுவிட்டதோ அதேபோன்று இது குறித்தும் அரசாங்கம் எவர் கூறுவதையும் கேட்கப் போவதில்லை. ஆனால் அரசாங்கமே இதன் விளைவுகளையும்அரசாங்கமே அனுபவிக்கவேண்டிவரும். இதை இன்று கருத்திற் கொள்ளாத அரசாங்கம் எதிர்காலத்தில் வருந்த வேண்டிவரும் என்பதிலும் சந்தேகம் எதுவுமில்லை.

---

வையே ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்று யாழ் அரசாங்க அதிபர் திரு. காமாணிக்கவாசகர் தெரிவித்தார்.

## ஜம்மு - காஷ்மீரில் தேர்தல் தலைவர்கள் ஆலோசனை

(டில்லி)

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடக்குவது பற்றி மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ஜனதாதள் மற்றும் சி.பி.எம். கட்சித் தலைவர்களோடு தனித்தனியே ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தேர்தல் ஒன்றை நடத்தக் கூடிய சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்துவது பற்றியும், அம் மாநிலத்தில் மீண்டும் மக்களாட்சியைக்கொண்டு வருவது பற்றியும் மத்திய அமைச்சர் பல்வேறு கட்சிகளுடனும் ஆலோசனை கலந்து வருவது தெரிந்ததே.

---

திர மூட்டும் செயல். இது டாக்காவில் டிசம்பரில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின்(சார்க்)

திங்கட்கிழமை இரவு பாராளுமன்றத்தில் உரையாற்றிய ரஷ்மான் பங்களாதேஷிற்குள் அனுப்பப்படுபவர்கள் எல்லோருமே இந்தியப் பிரஜைகள்; பங்களாதேஷிகள் அல்லர் என்றும் குறிப்பிட்டார்.

சுமார் ஆறாயிரம் பேரை பலவந்தமாக பங்களாதேஷிற்குள் அனுப்புவதற்கான முயற்சிகளை இடை நிறுத்துவதற்கு இந்தியா இணங்கிக் கொண்டுள்ளதாக ஞாயிறன்று பங்களாதேஷ் எல்லை இராணுவத் தளபதியொருவர் தெரிவித்தார். ஆனால் இந்தியாவின்

தேஷுக்குள் திருப்பி அனுப்புவதற்கான புதுடில்லியின் ஒரு திட்டத்தின் பகுதியே இந்தியாவின் அண்மைய முயற்சிகள் என புலனாய்வு அதிகாரிகள் முன்னதாக தெரிவித்திருந்தனர்.

இந்தியாவின் முயற்சி கண்டிக்கப்படவேண்டியது மனிதாபிமானமற்றது. எதுவிதத்திலும் நியாயப்படுத்த முடியாதது. இச் செயல் சர்வதேச விதிகள் சகலதையும் மீறுவதாகவும் அமைகிறது. 'சார்க்' உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் இச் செயல்கள் இடம்பெறுவது எமக்குகவலையைத் தருகிறது' இந்த வகையான செயல்கள் தொடருமேயானால் உச்சி மாநாட்டுக்கான சாத்தியப்பாடுகளே ஓரளவுக்கு அவை நிச்சயமற்றதாக்கும் என்று வெளியுறவு அமைச்சர் தமது உரையில் தெரிவித்தார்.

---

ஒப்பந்த ஆசிரியருக்கு

## முழுச்சம்பளம் வழங்குக கல்விப்பணிப்பாளர் பணிப்பு

(நல்லூர்)

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 44/90ன் கீழ் இளைப்பாறி 01- 01- 92 முதல் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு கடமையாற்றும் ஆசிரியர்கட்கு அவர்கள் இளைப்பாறும் போது கடைசியாக பெற்ற சம்பளத்தில் அடிப்படைச்சம்பளத்தை 01- 01- 92 முதல் வழங்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இக்கொடுப்பனவை 31- 12- 92 வரை மட்டுமே வழங்குமாறும் இவர் மேலும் பணித்துள்ளார்.

இதுவரை இவ்ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் கடைசியாக பெற்ற சம்பளத்தின் அரைவாசியே 01- 01- 92 இல் இருந்து வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

---

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மடுவில் சந்திரபுர ஸ்கந்தவ ரோதயா கல்லூரி மைதானத்தில் மாலை 3 மணிக்கு 17 வயதுக்குட்பட்டோர்பிரிவில் அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மோதுகின்றது. மாலை 4 மணிக்கு 19 வயது பிரிவில் உடுப்பிட்டி அ மி க. பாடசாலையை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மோதவுள்ளது. மாலை 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் 17 வயது பிரிவில் மானிப்பாய் இந்து எதிர் ஹாட்லி 17 வயது பிரிவில் ஸ்கந்தவரோதயாகல்லூரியை எதிர்த்து புனித ஜோசப் மகா வித்தியாலயம் மோதுகின்றது

---

யாழ் மாவட்டத்திற்கு தேவையான

## கட்டு நிதி பெறுவதற்கு கொழும்பில் அதிகாரி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திற்கான கட்டு நிதி தொடர்பாக கலந்துரையாடுவதற்காக யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தங்கியிருக்கிறார்.

இம்மாவட்டத்திற்கு தேவையான கட்டுநிதியை தாமதமின்றி அனுப்பிவைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இவர் கவனித்து வருகிறார். அதேவேளை யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மிகவிரைவில் கொழும்பு சென்று மேற்படி விடையம் குறித்து திறைசேரி அதிகாரிகளுடன்பேசிஉரியநடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க]

---

வடமராட்சி

யும், உபய சதிர்காமத்தில் இரண்டு குண்டுகளையும்வீசியதில் வெற்றிலைக்கேணியைச் சேர்ந்தபா.ஜேசுதாசன் [வயது 46] காயமடைந்தார்.

ஆனைவிழுந்தான் பகுதியில் உலங்குவானூர்தி நோட்டமிட பொம்மர்கள் குண்டுகளை வீசியபோது மந்திகைப் பகுதி அல்லோல கல்லோலமடைந்தது வைத்தியசாலைக்கு வந்த நோயாளிகள் பதற்றமடைந்தனர்.கடைகள் மூடப்பட்டன.பாடசாலைகள் மூடப்பட்டன மக்கள் மத்தியில் இனப்புரியாத பீதி நிலை தென்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைத் தொண்டர்கள் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்து வந்தனர். நேற்று மாலை 6.00 மணியளவில் குண்டு வீச்சு விமானங்கள் வடமராட்சிப் பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றன. (82,36)

---

நாகர்

காடு ஆகிய பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் தமது புகார்களைப் பதிந்து கொள்ளலாம்-

---

தனியான

தொகுதி மண்ணெண்ணெயை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிச் செல்வதற்காக சிறியரக கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும் மேற்படி தொகுதியில் எத்தனை பீப்பா மண்ணெண்ணெய் எடுத்து வரப்படும் என்பதுபற்றியும், எப்பொழுது இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்பது குறித்தும் எந்தவகையான தகவல்களையும் நேற்று மாலை வரை பெற்றுக்கொள்ள முடியவில்லை. (க)

---

எறிகணை

இதேவேளை படையினர் எட்டுக்கும் மேற்பட்ட எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இந்த எறிகணைகள் அச்சுவேலிப் பக்கமாக வீழ்ந்து வெடித்ததாக தெரியவருகிறது. இதனால் ஏற்பட்ட சேத விபரம் அறிய முடியவில்லை. [07]

---

சிரித்திரன்

களை நினைவு கூரும் கரும் பறவையின் ஆக்கம் போன்ற பல அம்சங்கள் இடம் பெறுகின்றன.

---

ஹெலி நடமாட்டம்

(வடமராட்சி)

பலாலிக்கும் ஆனையிறவுக்கும் இடையில் நேற்று பல தடவைகள் ஹெலிகப்டர்கள் சென்று வந்தன. (82)

---

இளவாலை

இங்குள்ள பல வயோதிபர்கள் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர் இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சமைத்துக் கொடுப்பதற்கு எவருமில்லை. இதனால் இவர்களது நோய் தீவிரமடைந்து இவர்கள் மரண அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். சிலர் ஏற்கனவே மரணமடைந்துள்ளனர்,

ஏனையவர்கள் படையினர் வழங்கும் தரமற்ற உலர் உணவுப் பொருள்களைப் பெற்று சமைத்து சாப்பிடுகிறார்கள். மேற்படி பகுதிக்குள் புகுந்ததுமே அனைத்து பொதுமக்களது வீடுகளும் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. பல வீடுகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருக்கிறது. இராணுவத்தினர் இப்பகுதிக்குள் புகுந்த சமயம் இளவாலை சூப்பி கடையடிக்கு அண்மையில் உள்ள வயல் வெளிப் பகுதியில் மூன்று பேர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் இதுவரை இனம் காணப்படவில்லை.

சுமார் 36 மாணவர்களை மட்டும் கொண்ட சென் கென்றிஸ் பாடசாலை தினசரி இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே இயங்குகிறது.இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்கக்

---

அப்பியாசப் புத்தகங்ப் 160களை வழங்கியமை குறிபிடத்தக்கது. (24)

## மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

[மானிப்பாய்]

ஆனையிறவு உப்பள முகாம் மீது வீரகாவியம் படைத்த மாவீரர்களின் அஞ்சலிக் கூட்டம் நேற்று மாலை 4. 30 மணியளவில் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்ச்சியை அடுத்து மானிப்பாய் நகரம் சோபை இழந்து காட்சி அளித்தது. மாவீரர்களுக்கு மக்கள் மலர்தூவி தங்கள் அஞ்சலியினைச் செலுத்தினர். மாவீரர்களின் காவியம் கவிவடிவில் ஒலித்த வண்ணம் இருந்தது.

மாலை 5. 15 மணியளவில் ''பாண்ட்'' இசையுடன் ஊர்வலமாக சோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. [07]

## "முரசொலி" கொடுப்பனவு

''முரசொலி'' நிறுவனத்தில் 20-08-92 வரையில் பணியாற்றிய சகல ஊழியர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகள் இன்று காலை 9-00 மணிக்கு ''முரசொலி'' பணிமனையில் வழங்கப்படும். மேற்படி கொடுப்பனவுகளை அன்றைய தினமே தவறாது பெற்றுக் கொள்ளுமாறு ஊழியர்கள் வேண்டப்படுகின்றனர்.

---

கிளாலி

ஓட்டிச் சென்ற தாளையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நவரத்தினம் (வயது 30) என்பவர் படுகாயமடைந்தார் சன்னம் இவரது விலா எலும்பை துளைத்துக் கொண்டு கழுத்துப்பகுதியால்வெளியேறிஉள்ளதுஇவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மற்றைய வள்ளத்தில் சென்ற இரண்டு ஓட்டிகளுக்கும் என்ன நடந்ததென்பது இதுவரை தெரியவில்லை. இந்த இரு வள்ளங்களையும் கடற்படையினர் கொண்டு சென்றுள்ளனர். [ச]

---

பாதுகாப்பு

ரிடம் இப்பதவியை ஒப்படைக்க வேண்டும் எனவும் அப்பத்திரிகை கோரியுள்ளது.

---

கூடிய மன நிலையில் இல்லை' பொதுவாக இப்பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும் மனோவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார் (க),(நி)

ஈழநாதம்

# சிறிலங்கா இராணுவத்தில் 55 பேருக்கு பரசூட் பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் பரசூட் பயிற்சியை முடித்துக் கொண்டு 55 பேர் வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பயிற்சியைப் பெற்ற கமாண்டோ பிரிவின் வெவ்வேறு தரத்திலான இராணுவ சிப்பாய்களில் பிரிகேடியர் தரத்தில் உள்ள உயர் அதிகாரி ஒருவரும் அடங்குவர் என்றும், இந்தத் தடவை கமாண்டோப் பிரிவின் மூன்றாவது, நான்காவது தொகுதி இராணுவத்தின் பயிற்சியில் இடம் பெற்றனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களுக்கான விருதினை சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ண வழங்கியுள்ளார்.

## கொலம்பியா புறப்பட்டது

(நியூயோர்க்)

அமெரிக்காவின் விண்வெளிக்கலமான கொலம்பியா நேற்று முன்தினம் புளோரிடாவின் கேப் கன்வரிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது பத்து நாள் பயணம் ஒன்றை மேற்கொள்ளும் கொலம்பியா கலிபோர்னியா, மத்திய தரைக் கடல் பகுதியின் மாறுதல்களைக் கண்காணிக்கும்.

## ஜம்மு - காஷ்மீர் குழுக்கள் எல்லை தாண்ட திட்டம்

பாகிஸ்தானில் இயங்கும் சில குழுக்கள் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக் கோட்டை கடந்து ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தினுட் புகுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதால் அம் மாநிலத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று "மாற்றம்" வெளியீடு

தமிழ்த்தாய் மன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான "மாற்றம்" வெளியீட்டு விழா இன்று மாலை 3.00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் வித்துவான் சொக்கன், கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றுவர், செம்பியன் செல்வன், க. தணிகாசலம், சோ. பத்மநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

## யாழ். மாவட்டத்திற்கு இத்தாலி உருளைக்கிழங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு இத்தாலி நாட்டிலிருந்து தருவிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்கொண்டு வருகிறார்.

இத்தாலி நாட்டில் இருந்து "டெசறி" என்ற இனத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி விதை உருளைக்கிழங்கு மிகவிரைவில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது அடுத்ததாக பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவிருக்கும் கப்பல் ஒன்றில் இவ்விதை உருளைக்கிழங்கு எடுத்துவரப்படும் என்று கூறப்பட்டது.

## கௌரி விரதம்

(கிளிநொச்சி)

கருமபுரம் 13 ஆம் யுனிட் கௌரி அம்பாள் ஆலய கௌரி விரதம் கடந்த ஐந்தாம் திகதி முதல் பக்தி பூர்வமாக இடம் பெற்று வருகிறது.

இவ் உற்சவ இறுதிநாளான நாளை காப்புக்கட்டுதலும் சுவாமி வெளிவீதி உலா வருதலும் இடம் பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

புங்குடுதீவுப் பகுதியில்

## அநாதரவாக இறந்த வயோதிபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுப் பகுதியில் வயோதிபர் ஒருவர் இறந்து சில நாட்களில் அவரது சடலத்தில் இருந்து துர்நாற்றம் வீசிய பின்னரே அவர் இறந்தது தெரிய வந்தது 5ஆம் வட்டாரப் பகுதியில் வசித்து வந்த வயோதிபர் ஒருவரே இவ்வாறு அநாதரவாக இறந்து போனவர் ஆவார்

வளவொன்றில் கிடந்து மீட்கப்பட்ட மேற்படி வயோதிபரின் சடலம் அயலவர்களினால் எரிக்கப்பட்டதாகவும் எவருக்குமே இவ் வயோதிபர் என்று இறந்தார் என்பது தெரியாது என்றும் புங்குடுதீவில் தனியாக வசிக்கும் அனைவருக்கும் இது போன்ற நிலை ஏற்படக்கூடும் என அங்கு வசிப்பவர்கள் அஞ்சுவதாகவும் சுகவீனத்தைக் காரணம் காட்டி புங்குடுதீவில் இருந்து கொழும்பு சென்று அங்கிருந்து தற்போது யாழ் வந்துள்ள நபர் ஒருவர் தெரிவித்தார். (22

## அரசுக்கு எதிராக வாக்களிப்பு

குறுகிய காலத்தில் பரந்தளவில் மக்களின் நம்பிக்கையை இழந்துபோன ஒரு அரசாங்கத்தை இதற்கு முன் கண்டதில்லை என பிரித்தானிய மேல் சபை அங்கத்தவர் கிளட்வின் பிரபு சபையில் தெரிவித்துள்ளார்.

நிலக்கரிச்சுரங்கங்களை மூடுவது பற்றி அரசாங்கம் எடுத்துள்ள முடிவு பற்றி பிரதிநிதிகள் சபை விவாதிக்க வேண்டுமென தொழிலாளர் எதிர்க்கட்சி கொணர்ந்த பிரேரணைக்கு சாதகமாக பிரித்தானியா மேல் சபை வாக்களித்தது.

பிரபுக்கள்சபையில் அரசுக்கு எதிராக வாக்களிப்பு நடைபெற்றுள்ளது. பிரதமரின் செல்வாக்குக் குறைவதற்கு ஒரு காரணமாகத் தெரிந்தாலும் பிரதிநிதிகள் சபையில் நம்பிக்கையான ஆதரவாளர்களிருப்பதாகவும் பிரதமர் ஜோன் மேஜர் கருதுகிறார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். செல்வம்

[சிவப்பிரகாசம் - றமேஸ்குமார்]

தாயின் மடியில் 19. 03. 1972 — தாயக மண்ணில் 17. 10. 1990

வசாவிளான் பகுதியில் சிறிலங்காப் படையினரின் "ஒப்பரேசன் ஜெயசக்தி" நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்தியவர்

திதி: 24. 10. 1992

உதடுகளில் புன்சிரிப்பும்
உயர்ந்த உன் தோற்றமும்
துணிவான உன் நடையும்
கனிவான உன் பேச்சும்
எங்கள் நெஞ்சில் நிறைந்துள்ளதடா
எங்கள் செல்வமே தாயகத்தின்
விடிவிற்காய் தாயன்பைத் துறந்து
தியாகத்தின் எல்லைக்குச் சென்றுவிட்ட
தியாகியே இரண்டு ஆண்டுகள்
சென்றாலும் உமது நினைவு எம்மைவிட்டு நீங்காது.

பண்டாரி அம்மன் கோவிலடி, தம்பசிட்டி, பருத்தித்துறை.

உன் பிரிவால் வாடும் பெற்றோர், உடன்பிறப்புக்கள்

(3491)

## பிறந்த நாள் வாழ்த்து செல்வன் எஸ். ரி. சண்

கொக்குவிலைச் சேர்ந்த செல்வன் S T. சண் இன்று (24-10-92) தனது 20-வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, லண்டனில் உள்ள அண்ணன்மார்களான ராஜன், ரஞ்சன், குட்டி கோண்டாவிலைச் சேர்ந்த சுசி அக்கா தம்பிமாரான ஜெயன், சுதன், நண்பர்கள், நண்பிகள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க வெனவாழ்த்துகிறார்கள்.

(சி-5296) நண்பன்: சி. இளங்கோ


## அனித்தா பயிற்சி நிலையம்

- SUGAR CRAFT
- BRIDAL MAKE UP
- COOKERY
- HAIRSTYLE
- FACIAL
- NEEDLE WORK
- CAKE ICING
- FLOWER MAKING

வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கே. கே எஸ் வீதி, பூனாறி மரத்தடி, கொக்குவில்.

(சி-5294)


## ஈராக்கிய அகதிகளுக்கு அமெரிக்கா புகலிடமளிக்கும்

ராஜாங்க அமைச்சு தகவல்

(நியூயோர்க்)

ஈராக்அகதிகள் 3500 பேரை அமெரிக்கா கடந்த வருடம்ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த ஆண்டிலும் இதே அளவு எண்ணிக்கையினருக்கு புகலிடம் அளிக்க அமெரிக்கா எண்ணியுள்ளதாகஅமெரிக்கராஜாங்க அமைச்சின் பேச்சாளர் ரிச்சர்ட் பவுச்சர் தெரிவித்துள்ளார்.

1991 ஆம் ஆண்டில் இடம் பெற்ற வளைகுடா யுத்தத்தின் போது அகதி நிலைக்குத் தள்ளப்பட்ட 30,000 ஈராக்கியர்களிடையே தெரிவானவர்களுக்கே கடந்த ஆண்டில் அமெரிக்கா புகலிடம் அளித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

சுமார் 25, 000 அகதிகள் சவூதி அரேபியாவில் இப்போதும் இருப்பதாகவும், 1992 இல் போன்று 93 இலும் அகதிகளுக்கு புகலிடம் அளிக்கப்படும் என்றும், அமெரிக்காவில் போன்று இன்னும் பல வெளி நாடுகளும் ஈராக்கிய அகதிகளை ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## புதுடில்லியில் சந்திப்பு

(டில்லி)

இந்திய-பாகிஸ்தானிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் வரும் 2ஆம் திகதி புதுடில்லியில் சந்தித்து காஷ்மீர் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு வரும் 4-ம் திகதி முதல் நடைபெறும் எனவும் தெரியவருகிறது.


## ஈராக்கிற்கு ஐ. நா. உதவி

(ஜெனிவா)

அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ள போதிலும் கூட ஈராக்கிற்கு மனிதாபிமான உதவிகள் அளிப்பது தொடர்பான உடன்பாடு ஒன்றில், ஐ நா.வும் ஈராக்கும் கையெழுத்திட்டுள்ளன.


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்



## 5-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்



வீரச்சாவு

தாயின் மடியில் 19. 03. 1972 — தாயக மண்ணில் 17. 10. 1990

வசாவிளான் பகுதியில் சிறிலங்காப் படையினரின் ''ஒப்பரேசன் ஜெயசக்தி'' நடவடிக்கையின் போது ஏற் பட்ட சமரில் வீரச்சாவெய்தியவர்

திதி: 24. 10. 1992

உதடுகளில் புன்சிரிப்பும்
உயர்ந்த உன் தோற்றமும்
துணிவான உன் நடையும்
கனிவான உன் பேச்சும்
எங்கள் நெஞ்சில் நிறைந்துள்ளதடா
எங்கள் செல்வமே தாயகத்தின்
விடிவிற்காய் தாயன்பைத் துறந்து
தியாகத்தின் எல்லைக்குச் சென்றுவிட்ட
தியாகியே இரண்டு ஆண்டுகள்
சென்றாலும் உமது நினைவு எம்மைவிட்டு நீங்காது.

பண்டாரி அம்மன் கோவிலடி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், உடன்பிறப்புக்கள்
(3491)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு, சலவைச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1992-ம்ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். முழு விபரங்களையும் 23-10-92 இல் வெளிவந்த அரச வர்த்தமானியில் அல்லது எனது பணிமனையில் பார்வையிடலாம்.

வைத்தியகலாநிதி
பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர்
21 - 10 - 1992

சு. சே. பி. ப. பணிமனை
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (சி-5277)

## தவறிவிட்டது

கைதடிப் பிள்ளையார் கோவில் அருகாமையில் பொன்னுத்துரை சிவபாலன் அவர்களின் உரபாக்கொன்று முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கைதடிப் பிள்ளையார் கோவில் பூசகரிடமோ அன்றேல் பி. சிவபாலன், நாவற்குழி கிழக்கு, கைதடி என்ற முகவரியில் சமர்ப்பிக்கவும் மிக முக்கிய ஆவணங்கள் ஆகையால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(3520)

## சர்வதேச கூட்டுறவு தின விழா - 1992

### தென்மராட்சிக் கூட்டுறவுக் கோட்டம்

இடம்:- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்:- 24 - 10 - 92 சனிக்கிழமை பி. ப. 2 மணி

சிறப்புரையைத் தொடர்ந்து மேற்படி போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தென்மராட்சிக் கூட்டுறவுக் கோட்ட விழாக் குழு
(5289)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## பயிற்சி நிலையம்


- SUGAR CRAFT
- BRIDAL MAKE UP
- COOKERY
- HAIRSTYLE
- FACIAL
- NEEDLE WORK
- CAKE ICING
- FLOWER MAKING

வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கே. கே எஸ் வீதி,
பூனாறி மரத்தடி, கொக்குவில்.
(சி-5294)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21. 09. 1915



விண்ணில்
28. 10. 1989

அமரர்
### ஏரம்பு செல்லத்துரை
அவர்கள்

திதி: சதுர்த்தசி 24.10.1992

வந்து வந்தென்னுளே உயிர்க்கின்ற எந்தையே
தந்து போவுன்னருள் தவிக்கின்ற தென்னுளம்
ஆடி போற் சோதியே அருள் மழை பொழிந்த ஐயா
தேடியுங் காணோமையா தேறலின்தெளிவேயுனைப்போல்
அன்பினை அருளினை அறத்தினை ஆற்றினார் யாரோ
- எந்தாய்
பொன் தந்தாய் மணிதந்தாய் பொருள் தந்தாய்
- புரிந்துளோர் இலரே எந்தாய்
சொந்தமுடனுனைத் திடமாய் தோத்தரித்தோம்
- அறிவாய் நீயும்
எந்தையுங் குருவும் இறையுமானவனே.

தந்தை தாய் குரு தெய்வம் தவறிலாப் பெரியோர் பாதம்
தவறாது வணங்கிடென்ற தாரக மந்திரத்தை
எந்தையே எந்நாளும் எப்போதும் எக்காலமும்
சிந்தையி லிருத்தியே தியானமதி லிருக்கின்றோம்
வந்துபார் பொய்யென்னில் புண்ணியா தவறாது
சந்ததமும் உன் திருவடி
கந்தமலர் கொண்டுநாம் கைதொழுப் பரவிக் காலுற
வணங்கி
காலமெலா முனைக் கைதொழுவோமே.
அன்பே அன்பே யென்றுனை கூவி அழைக்கின்றோம்
அதெந்துவே யென்றருளாயே.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பிரிவாற்றாமை குறித்துப் பராவியது

நாவற்குழி தெற்கு,
கைதடி.

தகவல்
பா பரமேஸ்வரி

(3352)

...அளிக்க அமெரிக்கா எண்ணியுள்ளதாகஅமெரிக்கஅரசாங்க அமைச்சின் பேச்சாளர் ரிச்சர்ட் பவுச்சர் தெரிவித்துள்ளார்.

1991 ஆம் ஆண்டில் இடம் பெற்ற வளைகுடா யுத்தத்தின் போது அகதி நிலைக்குத்...

## புதுடில்லியில் சந்திப்பு

(டில்லி)

இந்திய- பாகிஸ்தானிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் வரும் 2ஆம் திகதி புதுடில்லியில் சந்தித்து காஷ்மீர் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு வரும் 4-ம் திகதி முதல் நடைபெறும் எனவும் தெரியவருகிறது.

நான்கு கட்ட

திகதி தொடக்கம் முழு அளவிலான நிவாரணத்தை வழங்குவதற்கான மற்றுமொரு சுற்றுநிருபம் தமக்கு கிடைத்திருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [க]

ஆண்டு 5 - 1993
(புலமைப் பரிசில் Aug. 93)

இரண்டாவது
பயிற்சிப் பரீட்சை

31-10-92 [சனி]

இந்நிறுவனங்களில்
(நடாத்தப்படும்)

Bond - யாழ்ப்பாணம்
Selin - இருபாலை
pearl - நீர்வேலி
Kugan - ஆவரங்கால்
Modern - நெல்லியடி
Satha Pons - அல்வாய்
Y.M.C.A - பருத்தித்துறை
Brilliant - சாவகச்சேரி
Vinyls - சுன்னாகம்
Paarathy - சித்தன்கேணி
Lukky - கட்டுடை
Bitsmans - மானிப்பாய்
Vinayahar - ஆனைக்கோட்டை
Keen - திருநெல்வேலி
Osslo - கச்சேரியடி

விபரங்களுக்கு:
Examination Unit,
BOND
Institutes
யாழ்ப்பாணம்
(சி-5290)

...தார்.

சுமார் 25, 000 அகதிகள் சவூதி அரேபியாவில் இப்போதும் இருப்பதாகவும், 1992 இல் போன்று 93 இலும் அகதிகளுக்கு புகலிடம் அளிக்கப்படும் என்றும், அமெரிக்காவில் போன்று இன்னும் பல வெளிநாடுகளும் ஈராக்கிய அகதிகளை ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

...இது.

பிரபுக்கள்சபையில் அரசுக்கு எதிராக வாக்களிப்பு நடைபெற்றுள்ளது. பிரதமரின் செல்வாக்குக் குறைவதற்கு ஒரு காரணமாகத் தெரிந்தாலும் பிரதிநிதிகள் சபையில் நம்பிக்கையான ஆதரவாளர்களிருப்பதாகவும் பிரதமர் ஜோன் மேஜர் கருதுகிறார்.

## ஈராக்கிற்கு ஐ. நா. உதவி

(ஜெனிவா)

அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ள போதிலும் கூட ஈராக்கிற்கு மனிதாபிமான உதவிகள் அளிப்பது தொடர்பான உடன்பாடு ஒன்றில், ஐ நா.வும் ஈராக்கும் கையெழுத்திட்டுள்ளன.

## 5-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
06 — 10 — 1969



வீரச்சாவு
24 — 10 — 1987

### கப்டன் ரதீஸ்
(நல்லதம்பி முத்தழகு)

சிங்களத்துப் படைகள் திசைகெட்டு ஓட - நீயிர்
செங்களத்தில் சிந்திய குருதித்துளி ஒவ்வொன்றும்
எங்கள் தேசத்தின் எல்லைக் கற்களாய் எழும்!
தமிழீழத் தேசப்படமும் இப்
பூமிப் பந்தில் பொறிக்கப்படுவதற்கே
அமிழ்தான உயிர் தந்தீர்!
இமைப்பொழுதும் உமை மறவோம் இவ்வாழ்வில்!!

விபுலாந்த வீதி,
வாழைச்சேனை.

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்

(சி-5280)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 23 - 10 - 92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 6263

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்

24-5955, 22-8835, 24-3897, 41-8445, 27-5197, 26-4480, 41-1799, 26-649, 26-239, 24-9549, 26-5563, 24-5721, 26-9192, 28-364, 27-9105, 27-6741, 26-5113, 26-1098, 26-3812, 40-7207, 41-1227, 26-1494, 41-5178, 28-3735, 24-5676, 27-6749.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்

28-8444, 24 6065, 24-4390, 28-3326, 28-3233, 41-9855, 42-1721, 26-0514, 42-3964, 24-7375, 27-4920, 27-6855, 42-9326, 27-7952, 27-5633, 24-6293, 24-5703, 28-8951, 24-2359, 24-207.